மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் பொது மேலாளர் ஆய்வு

மேட்டுப்பாளையம், ஜூன் 12: மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணி குறித்து தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங், சேலம் கோட்ட ரயில்வே மேலாளர் பன்னாலால் ஆகியோர் மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்துக்கு வெள்ளிக்கிழமை வந்தனர்.

அப்போது, மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் அம்ருத் பாரத் திட்டத்தின்கீழ் நடைபெறும் பணிகள், மலை ரயிலுக்கு புதிய தண்டவாளம் அமைக்கும் பணி, கூடுதல் ரயில் தண்டவாளங்கள் அமைக்கும் பணி ஆகியவை குறித்து ஆய்வு செய்தனர்.

இதையடுத்து, தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து மதுரை, திருநெல்வேலி, திருச்செந்தூர், மங்களூரு, ராமேசுவரம் ஆகிய பகுதிகளுக்கு புதிய ரயில்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேட்டுப்பாளையத்தில் இருந்து செல்லும் ரயில்கள் போத்தனூர் ரயில் நிலையம் செல்லும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங். உடன், அதிகாரிகள் உள்ளிட்டோர்.

மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் கூடுதல் தண்டவாளங்கள் அமைக்கும் பணி 2 மாதங்களில் முடிவடையும். காட்டூர் ரயில்வே கேட் பகுதியில் மலை ரயில் கடக்கும்போது ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க மாற்று ஏற்பாடு செய்யப்படும். மேட்டுப்பாளையத்தில் இருந்து கோவைக்கு இயக்கப்படும் மெமு ரயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்க முடியாத நிலை உள்ளது. மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் உள்ளது போல காரமடை, பெரியநாயக்கன்பாளையம், துடியலூர் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நடைபாதை வசதி இல்லை. 8 ரயில் பெட்டிகள் நின்று செல்லும் வகையில் மட்டுமே வசதிகள் உள்ளன. கூடுதலாக அமைக்கப்படும் பெட்டிகளுக்கு நடைபாதை வசதிகள் இல்லை என்றார்.

இதைத் தொடர்ந்து, அவரிடம் மேட்டுப்பாளையம் ரயில் பயணிகள் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

மேட்டுப்பாளையம் சாந்தி நகர் பகுதியில் மேம்பாலம் கட்ட 17 ஆண்டுகளுக்கு முன்பே ரயில்வே சார்பில் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், இதுவரை அந்தப் பகுதியில் மேம்பாலம் கட்டவில்லை. எனவே, மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். திருநெல்வேலி- தூத்துக்குடி ரயிலை நிரந்தரமாக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடகோவை ரயில் நிலையத்தில் ஆய்வு: வடகோவை நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங், அங்கு நடைபெற்று வரும் கட்டுமானப் பணி, கூடுதல் ரயில் பாதை மற்றும் நடைபாதை அமைக்கும் பணிகளை பார்வையிட்டார். அப்போது, பணிகளை விரைவில் முடிக்க ரயில்வே அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு 4 புதிய திட்டங்கள்: அமைச்சர் வி.சம்பத்குமார் தொடங்கிவைத்தார்

கோவை ஸ்வர்கா பவுண்டேஷனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதியுடன் கூடிய வாடகை வாகன சேவையைத் தொடங்கிவைத்த அமைச்சர் வி.சம்பத்குமார். உடன், மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், ஆணையர் கட்டா ரவி தேஜா, அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் சொர்ணலட்சுமி குருபிரசாத் உள்ளிட்டோர்.

கோவை, ஜூன் 12: கோவையில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கான நான்கு புதிய சேவைத் திட்டங்கள் தொடக்க விழா, நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஸ்வர்கா பவுண்டேஷன் சார்பில் சாய்வுதள வசதியுடன் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் பயணிக்கும் வகையில் 'சாரதி 5' என்ற பிரத்யேக வாடகை வாகன சேவை, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களால் இணைந்து நடத்தப்படும் 'ஸ்வாக் கஃபே' என்ற புதிய உணவகம், மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கும் 'சமர்த்' திட்டம், ரயிலின் உள்ளே எளிதாகச் செல்லக் கூடிய சக்கர நாற்காலிகள் மற்றும் சாய்வுத்தளங்களை வழங்கும் 'சுகம்யா' ஆகிய திட்டங்களை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் வி.சம்பத்குமார் தலைமை வகித்து, தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதையடுத்து, கோவை புலியகுளத்தில் இயங்கி வரும் சௌக்யா பெயின் ரீஹேப் சென்டர் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் பங்கேற்று, 40 பயனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கினார். இதில், ஸ்வர்கா பவுண்டேஷன் அமைப்பின் நிர்வாக அறங்காவலர் சொர்ணலட்சுமி குரு பிரசாத் வரவேற்றார்.

அரசுப் பள்ளி மாணவர்களின் உயர் கல்வி சேர்க்கையில் கோவை மாவட்டம் முதலிடம்

கோவை, ஜூன் 12: அரசுப் பள்ளி மாணவர்களின் உயர் கல்வி சேர்க்கையில் கோவை மாவட்டம் மாநிலத்திலேயே முதலிடம் பிடித்திருப்பதாக கல்வித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2024 -25-ஆம் கல்வியாண்டில் கோவை மாவட்டத்தில் 11,058 மாணவ, மாணவிகள் அரசுப் பள்ளிகளில் பயின்றனர். இவர்களில் 10,555 மாணவர்கள் உயர் கல்வி பயில கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர். இது 95.45 சதவீதமாகும். இதன் மூலம் தமிழகத்தில் 38 மாவட்டங்களில் கோவை முதலிடம் பிடித்துள்ளது. விருதுநகர் மாவட்டம் 94.80 சதவீதத்துடன் இரண்டாம் இடத்திலும், பெரம்பலூர் 94.29 சதவீதத்துடன் மூன்றாம் இடத்திலும், திருப்பூர் 94.05 சதவீதத்துடன் நான்காம் இடத்திலும் உள்ளன.

திருப்பூர் மாவட்டத்தில் 12,066 மாணவ, மாணவிகள் பயின்ற நிலையில் அவர்களில் 11,348 பேர் உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர். கோவை மாவட்டம் 95.45 சதவீதத்துடன் முதலிடத்தில் இருந்தாலும் இந்த அளவானது பொறியியல் கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து மட்டுமே கணக்கிடப்பட்டிருப்பதாகவும், பாலிடெக்னிக், ஐடிஐ போன்றவற்றில் சேர்ந்தவர்களையும் சேர்த்து கணக்கிடும்போது கோவை மாவட்டத்தின் உயர் கல்வி சேர்க்கை 98.5 சதவீதமாக இருக்கும் என்றும் கல்வித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நான் முதல்வன், உங்களைத் தேடி உயர் கல்வி, புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் என உயர் கல்வி மாணவர் சேர்க்கையை உயர்த்துவதற்காக அரசு செயல்படுத்தியபல்வேறுதிட்டங்களை கோவையில் சிறப்பாக செயல்படுத்தியதால் உயர் கல்வி மாணவர் சேர்க்கை உயர்ந்திருப்பதாக கல்வி துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பள்ளி மாணவர்களுக்கு ஆபாச விடியோக்கள் அனுப்பிய ஆசிரியர் கைது

கோவை, ஜூன் 12: கோவையில் தனியார் பள்ளி மாணவர்களுக்கு கைப்பேசி மூலம் ஆபாச படங்கள், விடியோக்களை அனுப்பிய ஆசிரியரை போலீஸார் போக்ஸோ சட்டத்தின்கீழ் கைது செய்தனர்.

கோவையில் உள்ள பிரபல தனியார் பள்ளி ஒன்றில் பத்தாம் வகுப்பு மாணவர்களின் வாட்ஸ்அப் எண்களுக்குத் தொடர்ச்சியாக ஆபாச விடியோ, படங்கள் வந்துள்ளன. தற்செயலாக மாணவர்களின் கைப்பேசிகளை சோதித்த பெற்றோர், இதைக் கண்டு அதிர்ச்சியடைந்து பள்ளி நிர்வாகத்துடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தகவலறிந்து வந்த போலீஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வரும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பாபு (34) என்பவர் தன் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு இவற்றை அனுப்பியது தெரியவந்தது.

இதையடுத்து, போக்ஸோ சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்த போலீஸார், பாபுவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் ஜூன் 17-இல் ஏலம்

கோவை, ஜூன் 12: கோவை மாவட்ட காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதிகளில் போதைப் பொருள் கடத்தல் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் ஜூன் 17-ஆம் தேதி பொது ஏலத்தில் விடப்படவுள்ளன.

இது குறித்து மாவட்ட காவல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கோவை மாவட்ட காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதிகளில் போதைப் பொருள் கடத்தல் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட இரு சக்கரம், மூன்று சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வரும் 17-ஆம் தேதி பொது ஏலத்தில் விட தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் கோர விரும்புவோர் கோவை-அவிநாசி சாலையில் உள்ள பி.ஆர்.எஸ். வளாக ஆயுதப் படை மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை நேரில் பார்வையிடலாம்.

ஏலத்தில் பங்கேற்க விருப்புவோர் 17-ஆம் தேதி காலை 8 மணிக்கு தங்களது அசல் ஆதார் அட்டை, அதன் நகலுடன் கோவை மாவட்ட ஆயுதப் படை மைதானத்துக்கு வர வேண்டும். அங்கு முன்பணமாக ரூ.1,000 செலுத்தி டோக்கன் பெற்றுக்கொண்டு ஏலத்தில் கலந்து கொள்ளலாம். டோக்கன் பெறாதவர்கள் ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வாகனங்களை ஏலம் எடுத்தவுடன் அதற்கான முழுத் தொகையையும், 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரியையும் அன்றைய தினமே அரசுக்கு ரொக்கமாகச் செலுத்தி வாகனங்களை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : நீளமேடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.அட்வென்ச்சர் பார்க் (உரிமையாளர் - திருமதி.காயத்ரி, க/பெ.திரு.ராஜேஷ் கண்ணன்), 51, வித்யாவனம் பள்ளி சாலை, ஆனைகட்டி, கோயம்புத்தூர் - 641108. **இணைந்து கடன் பெற்றவர் : திருமதி.R.காயத்ரி, க/பெ.திரு.ராஜேஷ் கண்ணன், முகவரி 1:** கதவு எண்.428, நித்யா பாரடைஸ், 4-வது தளம், திருவள்ளுவர் நகர், GN மில் அஞ்சல், கோயம்புத்தூர் - 641029. **முகவரி 2 :** ஃபிளாட் எண்.916, ஸ்ரீ தர்சா பிரீமியம் அப்பார்ட்மெண்ட், இளங்கோ நகர், ஆவாரம்பாளையம், நவ இந்தியா, கோயம்புத்தூர் - 641006. **உத்தரவாதம் அளித்தவர் : திரு.P.சிவக்குமார், த/பெ.திரு.பழனிசாமி,** 9/120, ஆனைகட்டி, பெட்ரோல் பங்க் அருகில், ஆனைகட்டி அஞ்சல், கோயம்புத்தூர் - 641108. **கடன் நிலுவைத் தொகை : 11.06.2026 வரையில் ரூ.5,23,76,976.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 30.05.2024. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 16.08.2024. சொத்து விபரம் :** கோயம்புத்தூர் மாவட்டம், வடவள்ளி சார்பதிவு அலுவலகம், கோயம்புத்தூர் வடக்கு தாலுக்கா, எண்.24, வீரபாண்டி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, SF No.983-ல் 0.40 ஹெக்டேர், SF No.984-ல் 3.87.50 ஹெக்டேர், மொத்த விஸ்தீரணம் 4.27.50 ஹெக்டேர் அல்லது 10.56 ஏக்கர். பட்டா எண்.2980, இதில் உள்ள 7.00 ஏக்கர் விஸ்தீரணம். எல்லைகள் : SF No.985-க்கு வடக்கு, SF No.1009 & 984-க்கு தெற்கு, SF No.1009-க்கு கிழக்கு, SF No.981 & 982-க்கு மேற்கு. **பிணையாக வைக்கப்பட்டுள்ள இச்சொத்து திருமதி.காயத்ரி, க/பெ.திரு.ராஜேஷ் கண்ணன் அவர்களுக்கு சொந்தமானதாகும். காப்பு விலை : ரூ.3,51,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.35,10,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 29.06.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 22.06.2026 முதல் 26.06.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 29.06.2026 மதியம் 1.00 மணி வரை. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி Mob No : 8489903059 / முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **29.06.2026 மதியம் 1.00 மணி வரையிலோ** அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.** மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி Mob No : 8489903059 / முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி : bmcoim0913@centralbank.co.in / recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 11.06.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் : 09, கம்யூனிட்டி சென்டர், பஸந்த் லோக், வசந்த் விஹார், புது தில்லி - 110057. கிளை அலுவலகம் : ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட், 6வது தளம், 1547, கிளாசிக் டவர், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641018.

பொது அறிவிப்பு (அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏலம்)

[கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(1)-இன் கீழ்]
ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடம் (ஒடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்) அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகளை கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கும் பங்காளர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) அல்லது இவர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் / பிரதிநிதிகள் ஆகியோருக்கும் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழ்க்காணும் கடனாளர்கள், கூட்டுக் கடன்தாரர்கள் அவரது ஜாமின்தாரர்கள் ஆகியோர் பிரதிநிதி நிறுவனத்தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு, ஒடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஒடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்) நிறுவனத்தின் அதிகாரப்படியான அலுவலரால் வசூலிக்க செய்யப்படுவதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகள் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" என்ற முறையில் 30.06.2026 (E-ஏல நாள்) அன்று விற்பனை செய்யப்பட உள்ளன. இறுக்கான குறைந்தபட்ச விலை, பேணுதல்தொகை ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. **இந்தப் பொது ஏலத்தில் கலந்து கொள்வதற்கான பேணுதல்தொகையைக் கேட்பு வரைவோலை (D.D) / RTGS / NEFT ஆகியவற்றின் வாயிலாகவும் பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்பள்ளி படிவத்துடன்** இணைத்தும் 29.06.2026 அன்று அல்லது அதற்கு முன் மாலை 05:00 மணிக்குள் **ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். நிறுவனத்தின் அதிகாரப்படி அலுவலரிடம் தரக்கம் செய்ய** வேண்டிய கிளை அலுவலக முகவரி : ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். 6வது தளம், 1547, கிளாசிக் டவர், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641018.

கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமின் தாரர்(கள்) / சட்டப்படியான வாரிசுதாரர்(கள்) / சட்டப்படியான பிரதிநிதி(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் / நாள்படி தொகை	சுவாதீன வகை (முறையானது / நேரடியானது)	குறைந்தபட்ச விலை / பேணுதல் தொகை
HHFCOIHOU 24000054372	கலைவாணி த/பெ. பழனிச்சாமி	30.08.2025 ரூ.75,11,655/- (10.06.2026 நாள்படி)	நேரடி சுவாதீனம்	ரூ.56,70,000/- / ரூ.5,67,000/-

சொத்து விவரம் : இன்டிபெண்டண்ட் பகுதிகள் அனைத்து...ஆனால் கூடிய நிலம் அமைவிடம் - கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் சார்பதிவு மாவட்டம், அன்னூர் கிராமம், கதவு எண் 34C, S.F. எண் 510, குறுவேதை உட்பிரிவு S.F. எண் 510/5, பரப்பளவு 4.97 ஏக்கர், நிலத்தின் பரப்பளவு 6 சென்ட். இதன் நான்கு எல்லைகள் பின்வருமாறு :- வடக்கு : கிருஷ்ணன்பன் சொத்து, தெற்கு : தங்கவேல் சொத்து, கிழக்கு : S.F. எண் 509, மேற்கு : 11 அடி தெற்கு - வடக்கு வழிப்பாதை. அளவு :- கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 160 விங்கள், கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 160 விங்கள், வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 37-1/2 விங்கள், வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 37-1/2 விங்கள்.

HHFCOIHOU 24000056693	P நந்தினி, ஜோசப் A	21.07.2025 ரூ.37,56,374/- (10.06.2026 நாள்படி)	நேரடி சுவாதீனம்	ரூ.27,00,000/- / ரூ.2,70,000/-

சொத்து விவரம் : இன்டிபெண்டண்ட் பகுதிகள் அனைத்து...ஆனால் கூடிய குடியிருப்புச் சொத்து, S.F. எண் 596 (குறுவேதை உட்பிரிவு 596/3), மனை எண் B-18 & B-19 வடக்குப் பாகத்தில் உள்ள நிலங்கள், பரப்பளவு 1092 சதுர அடி, கதவு எண் 29/3, சொத்து வரி எண் 8635, நீர் இணைப்பு எண் 5055, மின்னாவாரிய இணைப்பு எண் 0313501392, எண்-2 கூடலூர் கிராமம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவு அலுவலக வட்டாரம். இந்தப் பொது வழிப்பாதை உரிமைகள் மற்றும் வசதிகளுக்கான சொத்தினை சென்றடைய பொது உரிமைகளும் அனைத்து இதர துணைப்பகுதிகளும் உட்பட. அளவு விவரங்கள் :- கிழக்கு மேற்காக வடக்கில் - 42 அடி. கிழக்கு மேற்காகத் தெற்கில் - 42 அடி. தெற்கு வடக்காகக் கிழக்கில் - 26 அடி. தெற்கு வடக்காக மேற்கில் - 26 அடி. மொத்தம் 1092 சதுர அடி. எல்லைகள் பின்வருமாறு :- உத்தர கிருஷ்ணனுக்கு ஆகியோரின் காலி நிலம், வீட்டு வசதிவாரியத்து வடக்கில், மனை எண் 17-க்குத் தெற்கில், 23 அடி அகலமுள்ள தெற்கு வடக்கு வேஆட் சாலைக்குக் கிழக்கில், மனை எண்கள் 10, 9 ஆகியவற்றுக்கு மேற்கில்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் : இந்த e-ஏலமானது https://bankeauctions..com இணையதளத்தில் 30.06.2026 (E-ஏல நாள்) அன்று முற்பகல் 11:00 மணிக்கும் பின் தொடங்கி, எண்ணிக்கை வரம்புடன் கூடிய தலா 10 நிமிடங்கள் காலநீட்டிப்புடன் நடத்தப்படும்.
ஆர்வமுள்ள வாங்குதாரர் / ஏலதாரர்கள் பேணுதல்தொகையினை RTGS / NEFT மூலம் அல்லது "HERO HOUSING FINANCE LTD." என்கிற பெயரில் கேட்பு வரைவோலை / RTGS / NEFT மூலம் செலுத்த வேண்டும். வெற்றி பெற ஏலதாரர்களின் பேணுதல்தொகை e-ஏலம் முடிவடைந்த பின்னர் திருப்பித் தரப்படும்.
E-ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் : 1. E-ஏலமானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்ப செலுத்த மாட்டாது" என்கிற முறையில் இணையவழியில் நடத்தப்படும். 2. குறைந்தபட்ச விலை 25 இலட்சம் வரைக்கான ஏல உயர்வு தொகை ரூ.15,000 (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்), குறைந்தபட்ச விலை 25 இலட்சத்திலிருந்து 50 இலட்சம் வரைக்கான ஏல உயர்வு தொகை ரூ.25,000 (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்), குறைந்தபட்ச விலை 50 இலட்சத்திலிருந்து 1 கோடி வரைக்கான ஏல உயர்வு தொகை ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்), குறைந்தபட்ச விலை 1 கோடி வரைக்கான ஏல உயர்வு தொகை ரூ.1,00,000 (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்). 3. இந்த e-ஏலத்தை நடத்துபவர்: M/s.C-1 இந்தியா பிரைவேட் லிட்., திருநாணி கிருஷ்ணா - 9948182222 (உதவி எண்கள்: உதவித் தலைவர் எண்: +91-124-4302020 / 2021 / 2022 / 2023 / 2024 | உதவிக் கைப்பேசி எண்கள் : +91-7291981124 / 25 / 26. மின்னஞ்சல் : support@bankeauctions.com / ara@rta@c1india.com) மூலம் நிறுவனத்தின் https://bankeauctions.com இணையத்தளத்தில் நடத்தப்படும். 4. ஒடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்குத் தெரிந்த வரையில் சொத்தின் மீது விவரங்கள் எதும் இல்லை. எனினும், ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் ஏலப்பள்ளியைத் தாக்கல் செய்யும் முன், ஏலம்விட உள்ள சொத்தின் மீதான விவரங்களுக்கான, உரிமைத்தன்மை, சொத்தைப் பார்க்கக்கூடிய உரிமைகோரல்கள் / உரிமைகள் / நிலுவைகள் தொடர்பாகத் தாங்களே சொத்தைக் விசாரித்துக் கொள்ள வேண்டும். இது தொடர்பாக, இந்த e-ஏல விளம்பரமானது ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பில் எந்த உறுதிப்பாட்டையோ பிரதிநிதித்துவத்தையோ வழங்கவோ வழங்க விரும்பவோ இல்லை. 5. அதிகாரப்படியான அலுவலர் / ஒடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எந்த முன்னறிவிப்பு இல்லாமலோ / உரிமைகளும் / நிலுவைக்கும் பொறுப்பாக முடியாது. இந்த விற்பனை, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் விதிகளுக்கும் / கட்டுப்பாடுகளுக்கும் கட்டுப்பட்டது. இந்த e-ஏலத்தில் இதர விதிமுறைகளும் நிபந்தனைகளும் பின்வரும் இணையத